**IN THE COURT OF JUDICIAL MAGISTATE, SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**CC.151/2023**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | நிஷாந்தினி | Prosecution | LW-1 as PW-1 |
| Father Name | ரவிச்சந்திரன் | Defence | |
| Village | | Taluk | Sirkali |
| Calling | | Age | 23/2025 |

Solemnly affirmed by Tmt.R.Geetha Grade III Bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day
10.06.2025. சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**எதிரி ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். கடந்த 23.07.2022 ஆம் வருடம் காலை 9.00 மணியளவில் எனது அம்மா மாடு கட்டுவதற்காக வயலுக்கு சென்றார். அப்போது அங்கிருந்த எதிரிகள் சண்முகம், கயல்விழி, சாந்தலட்சுமி என் அம்மாவிடம் மூவரும் இது எங்களுக்கு சொந்தமான இடம் என்று பிரச்சனை செய்தார்கள். எதிரி சாந்தலட்சுமி மற்றும் கயல்விழி இருவரும் சேர்ந்த எனது அம்மாவின் முடியை பிடித்து இழுத்து சரமாரியாக நெஞ்சில் அடித்தார்கள். சண்டை சம்பந்தமாக நான் கேள்விபட்டு சம்பவ இடம் சென்றபோது கயல்விழி, சண்முகம் மற்றும் சாந்தலட்சுமி என்னை குச்சிக்காரி தேவிடியா என்று தகாத வார்த்தைகளால் திட்டினார்கள். நான் எனது அம்மாவிற்கு முடியாத காரணத்தினால் அவரை அழைத்து கொண்டு மயிலாடுதுறை அரசு மருத்துவமனைக்கு 108 ஆம்புலன்ஸ் மூலம் கொண்டு சேர்த்தேன். எனது அம்மா அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தார். நான் வீட்டிற்கு வந்துவிட்டேன். மறுநாள் காலை 8.30 மணியளவில் எனது அப்பா மற்றும் அண்ணன் இருவரும் வயல் வேலைக்கு சென்ற போது எதிரிகள் முவரும் எனது அப்பா மற்றும் அண்ணனையும் தகாத வார்தைகளால் திட்டி எதிரி சண்முகம் எனது அப்பாவை அடித்துவிட்டார் சத்தம் கேட்டு நான் அங்கு சென்ற போது எதிரி சாந்தலட்சுமி மற்றும் கயல்விழி இருவரும் எனது நைட்டியை பிடித்து இழுத்து என்னை கீழே தள்ளி வயிற்றில் உதைத்தார்கள்.

சத்தம் கேட்டு எனது ஊரை சேர்ந்த ராகவன் மற்றும் மகேந்திரன் வந்த போது அவர்களையும் தகாத வார்த்தைகளால் எதிரிகள் திட்டினார்கள். எனது அப்பா என்னை சிகிச்சைக்காக மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில் அனுமதித்தார். சிகிச்சை முடிந்து நான் வைத்திஸ்வரன்கோயில் காவல் நிலையம் வந்து புகார் வாக்குமூலம் கொடுத்தேன். நீதிமன்றத்தில் தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ, 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதில் உள்ள விபரம் எனக்கு தெரியும். நான் சொல்ல சொல்ல போலிசார் எழுதிக்கொண்டார்கள். இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னைவிசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் விசாரணை செய்ய முன்வராததால் குறுக்கு விசாரணை முடித்துகொள்ளப்படுகிறது.**

**<u>IN THE COURT OF JUDICIAL MAGISTATE, SIRKALI</u>**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**<u>CC.151/2023</u>**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | உஷாநந்தினி | Prosecution | LW- 2 as PW-2 |
| Father Name | ரவிச்சந்திரன் | Defence | |
| Village | | Taluk | Sirkali |
| Calling | | Age | 53/2025 |

Solemnly affirmed by Tmt.R.Geetha Grade III Bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day
10.06.2025. சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**எதிரி ஆஜர்**

**<u>முதல் விசாரணை</u>**

நான் மேற்படி முகவரியில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். கடந்த 23.07.2022 ஆம் வருடம் காலை 9.00 மணியளவில் நான் மாடு கட்டுவதற்காக எங்களுடைய வயலுக்கு சென்றேன். அப்போது அங்கிருந்த எதிரிகள் சண்முகம், கயல்விழி, சாந்தலட்சுமி என்னிடம், இது எங்களுக்கு சொந்தமான இடம் என்று பிரச்சனை செய்தார்கள். எதிரி சாந்தலட்சுமி மற்றும் கயல்விழி இருவரும் சேர்ந்த எனது முடியை பிடித்து இழுத்து சரமாரியாக நெஞ்சில் அடித்தும், எனது தலையை மண்முட்டியில் மோதியும் என்னை தாக்கினார்கள். எதிரி சண்முகமும் என்னை தாக்கினார். எனக்கு மூச்சு தினறல் பிரச்சனை இருப்பதால் அதன்பின் என்ன நடந்தது என்று எனக்கு நினைவில் இல்லை. அதன் பின் எனது மகள் 108 ஆம்புலன்ஸ் மூலம் என்னை மயிலாடுதுறை அரசு மருத்துவமனைக்கு அழைத்து கொண்டு சேர்த்தனர். சிகிச்சையில் இருந்த என்னை போலிசார் விசாரித்தார்கள்,

**எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் விசாரணை செய்ய முன்வராததால் குறுக்கு விசாரணை முடித்துகொள்ளப்படுகிறது.**

**IN THE COURT OF JUDICIAL MAGISTATE, SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**CC.151/2023**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | ராகவன் | Prosecution | LW-4 as PW-3 |
| Father Name | பிச்சமுத்து | Defence | |
| Village | | Taluk | Sirkali |
| Calling | | Age | 65/2025 |

Solemnly affirmed by Tmt.R.Geetha Grade III Bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day
10.06.2025. சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**எதிரி ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் மேற்படி முகவரியில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். கடந்த 23.07.2022 ஆம் வருடம் காலை 9.00 மணியளவில் நான் எனது வீட்டில் இருந்த போது அ.சா.2 க்கும், எதிரிகளுக்கும் இடம் சம்பந்தமாக சண்டை நடந்ததை நான் தான் விலக்கி விட்டேன். எதிரிகள் சண்முகம் மற்றும் கயல்விழி இருவரும் சேர்ந்து கப்பிமுட்டில் தள்ளி அடித்தார்கள். அதன்பின் அ.சா.2 ஆம்புலன்ஸ் மூலம் மயிலாடுதுறை அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். மறுநாள் காலை 9.00 மணியளவில் நான் வேலைக்கு கிளம்பி கொண்டிருந்த போது சத்தம் கேட்டது. நான் சென்று பார்த்தபோது எதிரி சாந்தலட்சுமி அ.சா.1 ன் முடியை பிடித்து இழுத்து கீழே தள்ளி அடித்ததை நான் பார்த்தேன். அதன் பின் அசா.1 ஐ மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் விசாரணை செய்ய முன்வராததால் குறுக்கு விசாரணை முடித்துகொள்ளப்படுகிறது.**